உ







என்

குருநாதர் துணை

# ஸ்ரீமத் சதாநந்த சுவாமி ஆலப்பாக்கம் வந்து ஜீவ சமாதியான வரலாறு

ஆக்கியோன் : S.N. துளசிநாதன்

என் குருநாதன் துணை

# சதாநந்த சுவாமி பாடல்

1) சரணமென்று, பணிவோர்க்கு சதாநந்த சுவாமிநீயும்
வரமதை கொடுத்துநீயும் வாழ்த்து வதல்லாமல் வேறு
தரமதாய் உயர்ந்துதானும் தரணியில் வாழ்வதற்கு
கரமதைகாட்டி நீயும் கார்த்திட வேணுமைய்யா

2) அரத்தில் மேலோங்கி நிற்க்கும் அண்டத்தில் ஒருவரான
தரமதாய் தவங்கள்செய்து தவம்பெற்ற சிவமெஞ்ஞானி
கரமதை குவிப்போருக்கு கனிரசம்தந்த மெஞ்ஞானி
சரளமாய்வந்த ஸ்ரீலஸ்ரீ சதாநந்த சுவாமியாமே

3) தஞ்சையில்தான் பிறந்து தவசித்த ஞானியாகி
அஞ்சுகம்போல நீயும் ஆலப்பாக்கம் வந்தமர்ந்தாய்
பஞ்சம பாவந்தன்னை பறந்தோட செய்தஉன்னை
நெஞ்சார நினைப்போர் தன்னையும் என்னையும் எல்லோரையும்
நிழல்போல் கார்த்து நிற்பாய்

4) ஆலப்பாக்கம் வந்தமர்ந்து அன்பர்களை கார்த்துநின்றாய்
உலகத்தோர் உன்பெருமைகாண உன்னைநாடி வலமேவந்தார்
வலம்வந்த நபரையெல் லாம்வாழ்த்திய வரமளித்து
சலனமற்ற யோகநிலை ஜீவசமாதியானாய்

5) சமாதி யோகத்தில் சர்குருநாதனே சதாநந்தா நீயமர்ந்தாய்
மாமறையோர் உன்னைகாண மன்னர்களனைவரும் மகிழவே
திரண்டுவந்தாய்
கோமகனாகிநீயும் கொடுத்திட்டாய் வரமவர்க்கு
வாமனரூபமாகி வந்தென்னை ஆட்கொண்டு வரமதை அருளுவாயே

6) பூவதால் நாள்தோறும் புண்ணிய திருவடிபொற்பாதம் பூஜைசெய்தேன்
நாவதால் சொல்லபோமோ நான்படும் நரகமனவேதனையை
காவலாய் எனக்கு நீ கண்ணதை கொடுத்துமே காத்திடுவதல்லாமல் நீயும்
பாவலாய் எனக்குநீ பக்கதுணையிருந்து பாதுகாக்கவேணுமையா

7) சர்குருவாக வந்துமேநீயுமே சகலத்தையும் நீயுணர்ந்தாய்
நிர்மலமாகவே நானும்உன்னடி நாள்தோறும் தொழுதுநின்றேன்
தர்மசாஸ்திரமனைத்தும் எனக்குதந்து நீ அருள்புரிவாய்
கர்ம வினையகற்றி என்னை நீ அன்புடன் காத்திட வேணுமைய்யா

8) வாமனரூபமாகி வந்திட்டாய் வையகத்தில் ஆலப்பாக்கம்
தைமாதம் மக நட்சத்திர நாளன்று தானமர்ந்தாய் சமாதியோகம்
நாமனதாய்வந்த நற்சீடன் பிரதமசிஷியன் நாராயணசாமி உனக்கு
பாமரணாக உனக்கு பணிரண்டாண்டு பணிவிடை தொண்டுசெய்தார்

9) வேதமாமறையுணர்ந்த வேல்சாமி என்பவரும் வேண்டியே உன்னை நாடிவர
காதலாய் உனக்குதானுமே இருவரும்கனிவுடன் பூஜைசெய்தார்
ஆதாரமாய் உன்னைநம்பி அவனிதனில் அன்புடன் பூஜைசெய்ய
சாதகமாகதானும் உனக்கு சதாகாலம் பூஜைசெய்தார்

10) நாராயணன் முன்னதாக சதாநந்தனைதொழுது நற்கதி சமாதியானார்
வீராவேசமாக இரண்டாண்டு பின்னதாக வேல்சாமி சமாதியானார்
சரளமாய் இருவரும் சதாநந்தன் அடிபணிந்து ஜீவசமாதியானார்
கரமதை குவிப்போர்க்கு உலகுதனில் மூவரும் கண்கண்ட தெய்வமானார்

11) ஊரிலுள்ள மக்கள்கள் அனைவரும் வருடம்தோறும் உன்பூஜை
தன்னை செய்வார்
பாரிலுள்ள பக்தர்கள் அனைவரும் வந்துமே பார்த்துமே மனதுகிழ்வார்
பெரியோர்முதல் சிறியோர்வரை பக்தர்கள் அனைவரையும் பாதுகாக்க
வேணுமையா
நெரியோடு வந்துமே நின்பாதம் தொழுவோர்க்கு நேர்மையுடன்
வரமளிப்பாய்

12) திருவிடைமருதூரில் தேவஸ்தானம்பெற்ற தெய்வீக சதாநந்தா
அருவிபோல் வந்துநீயும் ஆலப்பாக்கம் வந்தமர்ந்து அன்பரைகாத்து நின்றாய்
நருமலர்கொண்டுமே நாராயணசாமியும் நாள்தோறும் பூஜைசெய்தார்
கருமவினையகற்றி ஆணிமாதம் 10ந் தேதி உன்காலடி
சேர்த்துக்கொண்டாய்

13) ஆவலாய் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி அன்றாடம் பூஜைசெய்ய
காவலாய் மக்களை கடவுளாய் இருந்துமே காப்பதுன்கடமை ஐய்யா
நாவதால் நாள்தோறும் உங்களை நாங்களும் நினையாத நாளுமில்லை
பாவலாய் நீங்களும் மக்களுக்கு பக்கதுணையிருந்து
பாதுகாக்கவேணுமைய்யா

14) வருடம்தோறும் உன்னைவந்து பூஜை செய்து வணங்காத மக்களில்லை
தருமங்கள்செய்துமே அன்னதானபூஜையும் தவறாமல்செய்து நிற்பார்
வருகின்ற பக்தரை வாழ்வித்து நீருமே வரம் தரவேணுமையா
கருமவினையபற்றி கலியுகந்தன்னிலே நீயும் கார்த்திடவேணும் சுவாமி

——X——

உ

# ஸ்ரீமத் சதாநந்த சுவாமி ஆலப்பாக்கம் வந்து ஜீவசமாதியான வரலாறு

ஸ்ரீமத் சதாநந்த சுவாமி பிரதம சிஷ்யன் சாது நாராயண சாமி மகன் துளசிங்கம் எழுதியது என்னவென்றால் எனக்கு எனது தகப்பனார் தெரிவித்த விஷயம் எனக்கு அப்போது வயது 9 இருக்கும் அவரை எனது தகப்பனார் போலீஸிலிருந்து ராஜினாமா செய்துவிட்டு, அவரை ஆயிரத்து துலாயிரத்து ஒன்பதில் (1909) ஆலப்பாக்கம் அழைத்து கொண்டு வந்து விட்டாராம்.

ஆனால் எனது தந்தைக்கு அப்பா சிதம்பரம் என்பவரும் அவருடைய மைத்துனர் முருகானந்த சுவாமியாரும் அதாவது எனது தந்தைக்கு மாமா ஆவார். அவரும் போலீஸில் இருந்தவர்கள்தானாம். அவர்கள் இருவரும் பென்சன் வாங்கினார்களாம். எனது தந்தை மாத்திரம் ராஜினாமா செய்து விட்டு சதாநந்த சுவாமியை அழைத்து வந்து விட்டாராம். அது என்ன காரணம் என்றால் எனது அப்பா போலீஸ் வேலையில் இருக்கும் போது சென்னையில் திருட்டு நிறைய போகுமாம். அப்போது அங்கு 6 பேர் ஒரு கோஷ்டி திருடர்கள்

ஒரு வீட்டில் நிறைய சாமான்களையும் துணிமணிகளையும் திருடிக்கொண்டு போய்விட்டார்களாம். அவர் திருடினசாமான்களை சைதாப்பேட்டை ஆற்றின்கரையோரம் தாழுபுதர் கீழ் பங்கிடுவார்களாம். திருடுபோனவர் வீட்டிலிருந்து போலீஸில் புகார் செய்து இருக்கிறார்.

அப்போது அந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் எனது தகப்பனாரையும் ஒரு ஏட்டையும் நீங்கள் இருவரும் அந்த திருடர்களை பிடிக்கவில்லையானால் உங்கள் இருவரையும் சஸ்பெண்டு செய்து விடுவேன் என்று ஆர்டர் போட்டாராம்.

ஆனால் எனது தகப்பனாரோடு ஏட்டு ஒருவர் முஸ்லீம் பாயாம். அவர் இருவரும் எக்மோர் கண்ணாஸ்பத்திரி ரோடு வழியாக வருத்தப்பட்டு பேசிக்கொண்டு வரும்போது கண்ணிமரா ஓட்டல் அருகே ஒரு ஆற்றங்கரை வாராவதியின்மேல் சுவாமியார் உட்கார்ந்துகொண்டு இருந்தவர், இவர்கள் இருவரையும் பார்த்து எனது தகப்பனார் பேரை சொல்லி நாராயணா இங்குவா என்று பேர் சொல்லி அழைத்தாராம்.

உடனே அந்த ஏட்டு சொன்னாராம், உட்கார்ந்து கொண்டிருக்கும் கிழவன் பேர் சொல்லி கூப்பிடுவதைபார் என்று ஏளனமாக பேசினாராம். உடனே அந்த ஏட்டினுடைய பேரையும் சொல்லி நீங்கள் இருவரும் வாருங்கள், என்று அழைத்தாராம்.

அப்போது இருவரும் அவரிடம் போய் நின்று எங்களை எதற்காக கூப்பிட்டாய் என்று கேட்கவும், நீங்கள் தேடிக் கொண்டுபோகும் நபர்கள் இப்பொது சைதாப்பேட்டை ஆற்றின்கரையோரம் தாழம்புதரில் சாமான்களைப் பங்கிட்டு கொண்டிருக்கிறார்கள். இப்பொது போனால் பிடிபட்டு போவார்கள். சீக்கிரமாக போங்கள் என்று சொன்னாராம். நாங்கள் போய்வருமளவும் இங்கேயே இருப்பாயா என்று கேட்டனராம். இருப்பேன் இல்லாமலும் இருப்பேன். போனால் போங்கள் இல்லாவிட்டால் விடுங்கள் என்று சொன்னாராம். அப்போது பஸ்சோ, காரோ ரொம்ப கிடையாதாம். ரோட்டில் டிராம் வண்டிதான் ஓடுமாம். அவர்கள் இருவரும் ஒரு ஜட்கா வண்டிபேசி அதில் ஏறிபோய் சாமியார் சொன்ன அடையாளப்படிபோய் அந்த

ஆறு நபர்களையும் கைது செய்து வந்து போலீஸில் ஒப்படைத்தார்களாம்.

அதன் பிறகு என் தகப்பனாருக்கு அந்த சாமியார் பேரில் ஆர்வமாகி அவரை எப்போது காண்போம் என்று ஏங்கி ஏங்கி தவித்தாராம். அப்போதெல்லாம் எனது தகப்பனாருக்கு கல்யாணம் ஆகி 10 வருடங்கள் ஆகி குழந்தைகள் இல்லாமல் இருந்ததாம். எனது தகப்பனார் திருவல்லிகேணி மார்க்கட் அருகே குறும்பத்தெருவில் குடியிருந்து வந்தாராம்.

ஒரு நாள் கவர்னர் வரும்போது போலீஸ் பாதுகாப்புக்காக ரோட்டில் நிற்பார்களாம். அப்படி எனது தகப்பனாரும் நின்றுகொண்டு இருக்கிறார். அப்போது சாமியார் டிராம் வண்டியில் போவதை எனது தகப்பனார் பார்த்து, சாமியார் போகும் அந்த வண்டியிலேயே எனது தகப்பனார் ஏறியதை பார்த்து நாராயணா சம்பளம் கொடுப்பது கவர்மெண்ட் நீ என்னைபார்த்து வண்டியில் ஏறிக்கொண்டாயே, உன்னை அதிகாரிகள் கேட்டால் என்ன சொல்வாய் என்று கேட்டாராம்.

அதற்கு என் தகப்பனார் ஒன்றும் பதில் சொல்லாமல் சாமியார் எங்கு போகிறார் என்று கூடவேபோய் அவர் மைலாப்பூர் கபாலீஸ்வரன் சன்னிதானத்தில் இருப்பதை அறிந்து கொண்டு மறுபடியும் டியூட்டியில் வந்து நின்றாராம்.

அப்போது அதிகாரிகள் நீ எங்கு போனாய் என்று யாரும் கேட்கவில்லையாம். அதற்கு மேல் அந்த சாமியார் பேரில் அதிக பக்தியாகி சாமியாரை தினம் ஒரு வேளையாகிலும் போய் பார்க்காமல் இருக்கமாட்டாராம் அவர் கோவில் அருகாமையில் உள்ள குளக்கரையில் குளித்து சன்னதியில் வந்து தங்கி இருப்பாராம்.

ஒரு நாள் என் தந்தையை பார்த்து போலீஸ் வேலையில் இருந்தால் எப்படியும் தப்பு நேரிடும். ஆகையால் உனக்கு நிலபுலன் இருந்தால் அதை பயிர் செய்து பிழைப்பது நல்லது. ஆகையால் நீ அப்படி இருந்தால் என்னிடம் வா இல்லாவிட்டால் வராதே என்று கண்டிப்பாக சொல்லி விட்டாராம்.

அதன்பிறகு எனது தந்தை வேலையை ராஜினாமா செய்துவிட்டு சாமியாரையும் அழைத்துக்கொண்டு ஆலப்பாக்கம் வந்து விட்டாராம்.

சாமியாருக்கு ஊருக்கு தென்பக்கம் 58 செண்டு நிலத்தை எங்கள் குடும்பத்தினர் அனைவரும் அவருக்கு தான கிரையம் செய்து, அவ்விடம் ஒரு குடிசைபோட்டு அதில் இருந்துகொண்டு அவர் திருவிடைமருதூர் அவதூத் மௌன சாமியிடம் வாங்கிய நவகண்டயோகம் செய்து வருவாராம்.

அவர் அம்மாதிரி இருக்கும்போது யாரும் அவரை பார்க்க கூடாதாம். அப்படி பார்க்க வேண்டுமானால் தூர இருந்து கை தட்டி சாமியென்று கூப்பிட்டுதான் போய் பார்க்க வேண்டுமாம். தவிர அவருக்கு வயது 90க்கு மேல் இருக்குமாம். அவரை ஆலப்பாக்கம் கிராமவாசிகள் அவர்களுக்க ஏதாவது அவசியமானால் சாமியாரை கேட்டுதான் செய்வார்களாம்.

அப்படி இருக்க சாமியாருக்கு அவ்விடம் கிராம மக்கள் உபத்திரவம் தாளாமல் என் தகப்பனாரிடம் எனக்கு இவ்விடம் சவுகரியமில்லை ஊருக்கு வடபுரம் இருந்தால் நலமாயிருக்குமென்று சொன்னாராம். அதே பிரகாரம் வடபுரம் உள்ள ஒரு ஏக்கர் நிலத்தை தானமாக கொடுத்தாராம்.

இதைப்பார்த்த ஊர்மக்களும் அவருக்கு 5 ஏக்கர் நிலம் தானமாக கொடுத்தார்களாம். அதன் பிறகு அவர் அங்கு சென்று ஆஸ்ரமம் அமைத்து கொண்டு ஊர்மக்களுக்கு நன்மையை செய்து ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தி இரண்டில் (1922) ஜீவசமாதி அடைந்தாராமம். அவர் வந்த பிறகு தான் என் தகப்பனாருக்கு மூன்று குழந்தைகள் பிறந்தோமாம். ஒரு பெண் இருவர் ஆண் நான் 1920 ல் பிறந்தேன். சுவாமியார் சமாதி ஆகும்போது இரண்டு வருடகுழந்தை எனக்கு பிறகு என் தம்பி பிறந்தான்.

சாமியார் எனது தகப்பனாருக்கு என்ன கட்டளை இட்டார் என்றால் நீ உனது மகளை கல்யாணம் செய்து கொடுத்துவிட்டு எனக்கு வந்து தொண்டு செய்ய வேண்டியது. இது நடுவில் வீட்டைவிட்டு இவ்விடம் வரக்கூடாது என்று நிபந்தனை விதித்தாராம்.

அதேபிரகாரம் எனது அக்காளை மணம் செய்து முடித்து விட்டு ஆஸ்ரம்மம் போய் கொண்டும் வந்து கொண்டுமிருந்தாராம். அப்போது எனக்கு வயது 9 இருக்கும் என் தம்பிக்கு 6 வயது தவிர அவர் வீட்டுக்கு வராமல் ஆஸ்ரமத்திலேயே தங்கி விட்டார். அவரோடு கூடவே வேல்சாமி என்பவரும் வந்து ஆஸ்ரமத்திலேயே இருவரும் அவருக்கு பூஜை செய்து கொண்டு வந்து சேவை செய்தார்கள். 1935ல் எனது தகப்பனாரும் ஜீவசமாதி ஆனார்.

அவர் சமாதியாகும்போது எனக்கு வயது 15 இருக்கும். அவர் சமாதியானது 1935ல் ஆனிமாதம் 10ந் தேதி சமாதியானார் செலவு சமாதியான பூராவையும் எனது அத்தை அமிர்தம்மாள்தான் ஏற்றுக்கொண்டு சமாதியில் அடக்கம் செய்தார். 40 நாள் பண்டாரம் வைத்து பூஜை செய்து கல்வெட்டு லிங்கம் போட்டார்கள். எனது அத்தை. அண்ணா நீ வீட்டுக்கு வந்து அடக்கமானால் அவ்விடமிருந்து அலங்காரமாய் எடுத்து வந்து சமாதி செய்ய வேண்டுமென்று அண்ணனை கேட்க அம்மா இரண்டு நாள் தான் இருக்கிறது நான் சமாதியாக வீட்டுக்கு வந்தால் எல்லாம் என்னை சுற்றி அழுவார்கள். அதெல்லாம் எனக்கு இருக்கக்கூடாது. நான் வரமாட்டேன் என்று சொன்னாராம்.

அதற்கு ஒருவருடைய கண்ணீரும் உன்மேல் படாமல் எடுத்து வந்து சமாதி செய்கிறோம் என்று சத்தியம் செய்த பிறகு வீட்டுக்கு வந்தாராம். அவரை எப்படி சமாதி செய்வது என்பதெல்லாம் தன் தங்கைக்கும் தம்பி ரங்கநாதனுக்கும் ஆக்கியபித்து கொல்லிவைக்கக் கூடாது கற்பூரம் ஒன்று மாத்திரம்தான் ஏற்ற வேண்டியது என்று எல்லா விபரமும் ஏற்பாடு முன்கூட்டியே சொல்லி விட்டாராம்.

அதே பிரகாரம் மறுநாள் ராத்திரி 12 மணியளவில் நாராயணசாமி.... நாராயணசாமி என்று மூன்று முறை தெருவில் இருந்து சத்தம் வந்தது போய்பார்த்தால் யாரையும் காணோம் கூப்பிடும்போது அவர் ஓம் ஓம் ஓம் என்ற மூன்ற முறை சொன்னார் நான் பேசிக்கொண்டிருக்கிறார் எப்படி உயிர் போகும் என்று அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். அவரை தின்னைமீது அமர்ந்து வாயை இருதரம் திறந்து மூடினார். அப்படியே உட்கார்ந்தபடியே

சமாதியாகி விட்டார்.

யாரும் அழவில்லை பண்டாரம் மாத்திரம் திருவாசகம் படித்தான் அதற்குமுன் எனக்கு என்ன சொன்னார் என்றால் ஒருவர் சாப்பிடும்போது அவரை பார்க்காதே ஒருவரை பார்த்து பொறாமைபடாதே அதையே திருப்பியார். தவிர நீ இருக்கும் வரை குடும்பத்தை பார்த்து அதற்குமேல் என் குருநாதனுக்கு தொண்டுசெய் எனக்கென்றுமாத்திரம் எதுவும் செய்யாதே, அவருக்கு செய்தால் எனக்கு செய்த மாதிரி என்று ஆக்கியபித்தார். அவர் சொன்ன பிரகாரமே அவரை அடக்கம் செய்தோம்.

அதன்பிறகு இரண்டு வருடம் கழித்து வேல்சாமியும் சமாதியானார். அவரையும் அங்கேயே அடக்கம் செய்துள்ளோம். நானும் என் தந்தை மாதிரி ஆக முருகன் அருளை வேண்டி தினம் வேண்டிகொள்கிறேன் அதற்கு மேல் ஈஸ்வரன் சங்கல்பம் எப்படியோ அப்படியேதான் நடக்கும் என்று தினம் முருகனை துதிபாடி நினைவில் வருகிறவரை தியானம் செய்கிறேன்.

இப்படிக்கு

சதாநந்தசாமி சிஷியன் சாது நாராயணன் மகன் துளசிங்கம்

இந்த வரலாறு எழுதியது

(தவிர இப்போது ஆஸ்ரம இடம் 3 ஏக்கர் தான் மீதி இடம் 2 ஏக்கர் நிலம் ஏரோபிளேன்செட்டில் சேர்த்துக் கொண்டார்கள். ஏரோகிளேன் செட் 3 ஏக்கர் நிலம் எடுத்துக் கொண்டதற்கு அதற்கு உண்டான கிரயம் ஆஸ்ரமத்திற்கு இதுவரை கொடுக்கவில்லை. ஆனால் கவர்மெண்ட்டோ மீதி 3 ஏக்கர் சமாதி உள்ள இடத்திற்கு ஈ.எல்.டி. வரி 6000 க்கு எங்களுக்கு கவர்ன்மன்ட் அனுப்பியிருக்கிறது. இது என்ன நியாயம்? சர்க்கார் எடுத்துக்கொண்டதன் பிறகு வேலியெல்லாம் போட்டு ஆஸ்ரமத்தை ஊர் மக்களும் யாவரும் சேர்ந்து தைமாதம் மகநக்ஷசத்திரத்தில் அவருக்கு குருபூஜை செய்து அன்னதானம் முதல் செய்து வருகிறோம். இந்தவருடம் 83வது குருபூஜை வெகு விமரிசையாக சதாநந்த பக்தர்கள் நடத்தினார்கள் இந்த விஷயம் எழுதியது சாது நாராயணன் மகன் துளசிநாதன்)

அன்பே சிவம் அன்பே சிவம்

ஓம் – தத் – ஸத் – குருபரபிர்மனே நம



சதாநந்த சுவாமி சிஷியர்களும் சதாநந்தசாமி

அன்பர்களும் கிராம வாசிகளும் பொது

மக்களும் வருடந்தோறும் குருபூஜையை

வெகுவிமரிசையாக கொண்டாடி வருகிறோம்

சதாநந்த சுவாமி சிஷியன் நாராயணசாமி மகன்

# துளசிங்கம்